# IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, THANJAVUR

## DEPOSITION OF WITNESS

## OS .No. 135/2018

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | | திரு. கண்ணன் | ஊர் | : | |
| த.பெ. | : | திரு. துரைமாணிக்கம் | மாவட்டம் | : | |
| வயது | : | | தொழில் | : | |

2025ம் ஆண்டு ஜுலை திங்கள் 31-ஆம் நாள் **வா.சா.1 ன்** வாக்குமூலம் (1969ம் ஆண்டின் 54-வது விதியின் 95வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.D.சுரேந்தர் மொழிபெயர்ப்பாளர், என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

<u>முதல் விசாரணை</u>

சாட்சியத்தின் முதல் விசாரணையை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். இதில் உள்ள விபரங்கள் எல்லாம் நான் சொன்னவைதான். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். எனது அப்பா துரைமாணிக்கம் பெயரில் கிரய பத்திர சான்று நகல் தாக்கல் செய்கிறேன் அது **வா.சா.ஆ.1** ஆகும். 23.12.1991 இல் எங்கள் குடும்பத்தில் ஏற்பட்ட குடும்ப ஆரஜ்மெண்ட் தாக்கல் செய்கிறேன் அது **வா.சா.ஆ.2** ஆகும். அது பிரதிவாதி தரப்பில் ஆட்சேபிக்கபட்டது. 5.10.1993இல் எனது தந்தை இறந்துவிட்டார் அவரின் இறப்பு சான்று நகல் தாக்கல் செய்கிறேன் அது **வா.சா.ஆ.3** ஆகும். 9.11.2017 இல் கிள்ளிவளவன் 4, 5 பிரதிவாதிகளுக்கு எழுதி கொடுத்த செட்டில்மெண்ட் பத்திர நகல் தாக்கல் செய்கிறேன். 10.2.2010 தேதியில் என் தாயார் பெரியநாயகி அம்மாள் இறந்துவிட்டார் இறப்பு சான்று தாக்கல் செய்கிறேன் அது **வா.சா.ஆ.4** ஆகும். 27.9.1993இல் என் தந்தையார் இறப்புக்காக வழங்கபட்ட வாரிசு சான்று தாக்கல் செய்கிறேன் அது **வா.சா.ஆ.5** ஆகும். 15.12.2016 தேதியிட்ட தாவா சொத்தின் சிட்டா நகல் தாக்கல் செய்கிறேன் அது **வா.சா.ஆ.6** ஆகும். 15.12.2016 தேதியிட்ட 1424 பசலி அடங்கல் நகல் தாக்கல் செய்கிறேன் அது **வா.சா.ஆ.7**ஆகும். 18.2.2018 தேதியிட்ட 2வது வாதி பெயரில் உள்ள வீட்டு வரி ரசீது நகல் தாக்கல் செய்கிறேன் அது **வா.சா.ஆ.8**

ஆகும். 4, 5 பிரதிவாதிகள் 7, 8 பிரதிவாதிகளுக்கு எழுதி கொடுத்த 3.11.2021 தேதியிட்ட கிரய பத்திர சான்று நகல் தாக்கல் செய்கிறேன் அது **வா.சா.ஆ.9** ஆகும். 9.10.2020 தேதியில் கும்பகோணம் மேற்கு காவல்நிலையத்தில் கொடுத்த புகார் மனு நகல் தாக்கல் செய்கிறேன் அது **வா.சா.ஆ.10** ஆகும். 5.11.2018 தேதியில் தினதந்தி நாளிதழில் பொது அறிவிப்பு நகல் தாக்கல் செய்கிறேன். சப் ரிஜிஸ்டர் ஆபிஸ், கும்பகோணத்தில் தாவா புல எண்ணை பொறுத்து பத்திரம் பதிவு செய்யக்கூடாது என்று தடங்கல் வழக்கறிஞர் மூலம் அனுப்பினேன் அதன் அலுவலக நகல் தாக்கல் செய்கிறேன் அது **வா.சா.ஆ.11** ஆகும்.

குறுக்குவிசாரணை வழக்கறிஞர் வேண்டுகோள்படி ஒத்திவைக்கப்படுகிறது.

நான் சொல்ல என் உத்திரவுப்படி
தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,
மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்
காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று
ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒம்/- ப ,நாகராஜன்)
2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.